தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-9-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**அக்டோபர் 2012 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்**

அக்டோபர் மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இப்பல்கலைக்கழக பயிர்ப்பாதுகாப்பு மையத்தின் அறிக்கை பின்வருமாறு:

**நெற்பயிர்**

தர்மபுரி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டுப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வயல்களில் விளக்கு பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் @ 25 கிலோ/எக்டருக்கு அல்லது பின்வரும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இ.சி 1500 மில்லி / எக்டர் (அல்லது) பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 600 மில்லி / எக்டர் அல்லது புரோபினோபாஸ் 50 இ.சி 1000 மில்லி எக்டருக்கு தெளிக்கவும்.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நெற்பயிரில் இலைப்பேன் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 50 மில்லி அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 எஸ்.எல். 40 மில்லி / 20 சென்ட் நாற்றாங்காலில் தெளிக்கவும்.

**பருத்தி**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் தருமபுரியிலும் மாவுப்பூச்சி மதுரை மாவட்டத்திலும் தென்படுகின்றன. ஆதலால் இவற்றைக் கண்காணிக்க விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஒரு ஏக்கருக்கு ஐந்து வைக்கவும். இவற்றைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் சோப் 1 கிலோ, 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். பொருளாதார சேத நிலைக்கு அதிகமாக தென்பட்டால் டிரைஅசோபாஸ் 40 இ.சி. 2 லிட்டர் / ஒரு எக்டருக்கு அல்லது அசிபேட் 75 எஸ்.பி. 1.30 கிலோ / ஒரு எக்டருக்கு அல்லது மீத்தைல் டிமட்டான் 25 இ.சி. 500 மில்லி / ஒரு எக்டருக்குத் தெளிக்கவும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும் மற்றும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் குளோர்பைரிபாஸ் 25 இ.சி. 2 லிட்டர் / ஒரு எக்டருக்கு அல்லது பாசலோன் 35 இ.சி. 2.5 லிட்டர் / ஒரு எக்டருக்கு அல்லது கார்பரில் 50 டபிள்யு.பி 2.5 கிலோ / ஒரு எக்டருக்குத் தெளிக்கவும்.

**நிலக்கடலை**

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் பின்வரும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும். பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 750 மில்லி / ஒரு எக்டருக்கு அல்லது குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 1250 மில்லி / ஒரு எக்டருக்கு அல்லது பாசலோன் 35 இ.சி. 750 மில்லி / ஒரு எக்டருக்குத் தெளிக்கவும்.

**கரும்பு**

புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் பகுதிகளில் மேல் தண்டுத் துளைப்பான் தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிராமா முட்டை ஒட்டுண்ணிகள் 6 சி.சி. ஒரு ஏக்கர் பயிரில் வெளியிடவும்.

**I. சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளின் கவனத்திற்கு**
**நாற்றாங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள் பின்வருமாறு**

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு, தத்துப்பூச்சிகள் மற்றும் இலைப்புள்ளி நோய் தாக்குதல் நாற்றங்காலில் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த:

**அ) ஈர விதை நேர்த்தி:**

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைத்து விதைக்கவும்.
2. நெல் நாற்றுக்களைப் பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

**ஆ. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இதில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நெல் நாற்றங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மேலாண்மை**

1. அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 செண்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.
4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் பாஸ்போமிடான் 40 எஸ்.எல். – 50 மிலி / 20 செண்ட் அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 எஸ்.எல். 40 மி.லி/20 செண்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**II பயிர்களைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுபடுத்தும் முறைகள்**

தென் மேற்கு பருவ மழை பல இடங்களில் சரியாக பெய்யாமல் பொய்த்தனால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப் பூச்சி, வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் பப்பாளி மாவுப்பூச்சிகளின் தாக்குதல்கள் பல இடங்களில் தென்படுகின்றன. ஆதலால் விவசாயிகள், உணவு வகைப் பயிர்களிலும் தோட்டப் பயிர்களிலும் மஞ்சள் ஒட்டும் பொறிகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப் மருந்து 1 கிலோ 40 லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் உள்ள மாவுப் பூச்சிகளின் தாக்குதல்களை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுபடுத்தலாம். இதற்காக அருகில் உள்ள இப்பல்கலைக்கழக கல்லூரி, வேளாண் ஆராய்ச்சி நிலையம் அல்லது வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாக பெற்று மாவுப் பூச்சித் தாக்குதலைக் கட்டுபடுத்தலாம்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்